**சுருக்கம்**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2016–17– சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மேஜைக் கணினி அல்லது மடிக்கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி ஆகியவற்றை வாங்கி வழங்க அனுமதி அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–1)த் துறை

அரசாணை(நிலை) எண். 95 நாள்: 18.08.2016

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.79, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 4.7.2016.
2. அரசு கடிதம் எண்.16090/மாஅதி.1/2016, நாள் 28.7.2016.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.35548/2016/NEDM-2, நாள் 04.08.2016 மற்றும் 08.08.2016.

-----

ஆணை:

படிக்கப்பட்ட 1–ல் உள்ள அரசாணையில், 2016–17ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

2. சட்டமன்றப் பேரவைச் செயலகம் தனது குறிப்பில் 13–வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், 14–வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து மடிக்கணினி (Laptop)/ மேஜைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser/Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband/Internet Data card connection) ஆகிய வசதிகளை வழங்கப்பட்டதுபோல, தற்போதுள்ள 15–வது சட்டமன்ற உறுப்பினர்களும் பெறுவதற்கும், 14–வது சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஏற்கனவே பணியாற்றி தற்போது மீண்டும் 15வது சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தேடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏற்கனவே அவர்களுக்காக வாங்கப்பட்ட கணினிகள் பழுது ஏற்பட்டு அவற்றை சரிசெய்ய இயலாத நிலை இருந்தாலோ அல்லது தற்போதைய தொழில்நுட்ப வசதிகளை உள்ளடக்கிய நிலையில் இல்லாமல் இருந்தாலோ அவர்கள் விருப்பப்படின் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து புதியதாக கணினி / மடிக்கணினி வாங்கி கொள்ள ஏதுவாகவும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவருடைய பதவிக்காலம் முடியும் வரை அவர்கள் பயன்படுத்தும் கணினிக்கான அகண்ட அலைவரிசை

இளையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) தடங்கல் இல்லாமல் தொடர்ந்து பெறுவதற்கு வசதியாக அவற்றினை புதுப்பிக்கும் செலவினத்தை (Broadband charges/Internet Data card Recharges Bills) ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியொதுக்கத்தில் மேற்கொள்வதற்கு ஏதுவாக உரிய ஆணைகள் வெளியிடுமாறு இத்துறையை கேட்டுக்கொண்டது.

3. படிக்கப்பட்ட 3–ல் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், 2011–12–ம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர்களுக்காக அகண்ட இணையதள வசதியுடன் கூடிய கணினிகள்/ மடிக்கணினிகள் மற்றும் பிரிண்டர் மூன்று வருட உத்திரவாதத்துடன் வாங்கி வழங்கப்பட்டது எனவும், ஏற்கனவே மூன்றாண்டுகள் உத்தரவாதத்துடன் வாங்கி வழங்கப்பட்ட கணினிகள்/ மடிக்கணினிகள் தற்போது ஐந்து ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் நல்லமுறையில் பயன்படுத்த ஏதுவாக இருக்காது என்பதாலும், தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடான வசதிகளை அளித்திட வாய்ப்பில்லாத நிலையில் உள்ளதைக் கருத்திற்கொண்டும், 15வது சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு புதியதாக கணினி/ மடிக்கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணைய தள இணைப்பு வசதி ஆகியவற்றை ஒரு முறை மட்டும் வாங்கிக் கொள்ள அனுமதி அளிக்கலாம் எனவும் இதற்கென, 2016–17–ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின், வரையறுக்கப்படாத கூறு நிதி ஒதுக்கீட்டிலிருந்து, கணினி கொள்முதல் செய்திட உரிய வழிமுறைகளைப் பின்பற்றி, தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள அந்தந்த மாவட்ட ஆட்சியர்/ மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளித்திடலாம் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இணையதள இணைப்பு வசதிக்கான செலவினத்தை, ஒவ்வொரு ஆண்டும், அந்தந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின், வரையறுக்கப்படாத கூறு நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ள, அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரமளித்திடலாம் எனவும், அகண்ட அலைவரிசை இணையதளப் பயன்பாட்டினை பொருத்தவரை சட்டமன்ற உறுப்பினர் பயன்படுத்தும் பட்டியல்படி மாதாந்திரம் பயனீட்டுக் கட்டணம் அல்லது ரூபாய் 2,000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இவற்றில் எது குறைவோ அந்தத் தொகை அனுமதிக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவற்றுக்கான உத்தரவாத காலக்கெடுவிற்குப் (Warranty Period) பின்னர், அவற்றின் பராமரிப்பு மற்றும் தொடர் செலவினங்களை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஆணையிடலாம் எனவும் தெரிவித்து, ஏற்கனவே 2011–2012–ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டவாறு, தற்போது, 15–வது சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் கணினி/ மடிக்கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள இணைப்பு வசதிகளை வழங்குவது குறித்து, 2016–17 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் வரையறுக்கப்படாத கூறு நிதியில் வழிவகை செய்திடலாம் என தெரிவித்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2016–17–ஆம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து 15வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமல்லாது, 14–வது சட்டமன்ற பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மடிக்கணினி (Laptop) அல்லது மேஜைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser/Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband/Internet Data card connection) ஆகியவற்றை ஒரு முறை

மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து வழங்க சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் / மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(ii) இணையதள இணைப்பு வசதிக்கான செலவினத்தை ஒவ்வொர் ஆண்டும், அந்தந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் வரையறுக்கப்படாத கூறு நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(iii) அகண்ட அலைவரிசை இணையதள பயன்பாட்டினை பொருத்தவரை சட்டமன்ற உறுப்பினர் பயன்படுத்தும் பட்டியல்படி மாதாந்திர பயனீட்டுக்கட்டணம் அல்லது ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இதில் எது குறைவோ அந்தத் தொகையை பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

(iv) மேலும், கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவற்றின் உத்தரவாத காலக்கெடுவிற்குப் (Warranty Period) பின்னர் அவற்றின் பராமரிப்பு மற்றும் தொடர் செலவினங்களை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.2705/ACS(F)/P/16, நாள் 09.08.2016–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 வாயிலாக).
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–108.
ஆணையர், கருவூலக் கணக்கு, சென்னை–15.
உறுப்பினர்/செயலர், மாநிலத் திட்டக் குழு, சென்னை–5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமை செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.

சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தேசிய தகவல் மையம், சென்னை–9.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்/செயலாளர் – I, சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.